RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 26 | பிப்ரவரி.2 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# "வழக்கத்தைவிட பெரும் ஏமாற்றம்" மத்திய பட்ஜெட் குறித்து முதல்வர் ஸ்டாலின்

சென்னை: பிப்.2-

மத்திய பட்ஜெட் குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாட்டுக்கான சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், இந்த ஆண்டாவது, ஒன்றிய பாஜக அரசின் கண்களுக்குத் தமிழ்நாடு தெரியும் ஸ்ரீ அவர்களது காதுகளில் நமது உரிமைக்குரல் விழும் என்று எதிர்பார்த்திருந்தோம். அந்த எதிர்பார்ப்பைப் பொய்க்கச் செய்து, ஏமாற்றத்தை வழங்கியிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு.

இன்று ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 202627ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில், தமிழ்நாட்டின் நலன் முற்றிலுமாகப் புறகணிக்கப் பட்டுள்ளதோடு, ஏழைகள் ஸ்ரீ பெண்கள் ஸ்ரீ விவசாயிகள் விளிம்பு நிலை மக்கள் என எந்தப் பிரிவினருக்கும் நன்மை பயக்கும் முக்கியத் திட்டங்கள் இதில் இடம்பெறவில்லை.

மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு முறையில், தமிழ்நாடு உள்ளிட்ட வளர்ச்சியடைந்த மாநிலங்களை ஒன்றிய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது என்ற கருத்தை, நாம் வலுவாக முன்வைத்து வருகிறோம். மொத்த வரி வருவாயில் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் பங்கு 41 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்பட்ட வேண்டும் எனத் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் கோரிக்கை இம்முறையும் புறக்கணிக்கப்பட்டு, மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு தொடர்ந்து 41 விழுக்காடு என்ற அளவிலேயே தொடரும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த ஏமாற்றத்தையே தருகிறது.

அதுமட்டுமின்றி, இந்தியப் பொருளாதார வளர்ச்சியில், மாநிலங்களின் பங்களிப்பை உரிய முறையில் 16 ஆவது நிதிக்குழு அங்கீகரிக்க முற்பட்ட போதும், நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்தி வரும் தமிழ்நாட்டுக்கு நிதிப்பகிர்வு சதவீதம் இதர வளர்ச்சியடைந்த மாநிலங்களைக் காட்டிலும் குறைவாகவே அளிக்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. தமிழ்நாட்டுக்கான வரிப்பகிர்வு 4.097 விழுக்காடு என்ற மிகச்சொற்ப அளவிலேயே அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இருக்கும் எனத் தெரியவருகிறது. இதன் மூலம்



முதற்கட்ட மதிப்பீடுகளின்படி இதர ஒப்பிடத்தக்க மாநிலங்களைக் காட்டிலும் ஆண்டுக்கு சுமார் ரூ. 5,000 கோடி நிதி இழப்பு ஏற்படும். கடந்த பல ஆண்டுகளாகவே நிதிப்பகிர்வில் தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் நிலை, இன்று 16ஆவது நிதிக்குழுவிலும் சரிசெய்யப்படவில்லை என்பது மிகுந்த கவலை அளிக்கிறது.

அண்மையில், சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புச் சீரமைப்பில் மாநிலங்களுக்கான நிதி வருவாய் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த ஆண்டு தமிழ்நாட்டுக்கான ஒன்றிய வரிகளின் பங்கு சுமார் ரூ. 1,200 கோடி அளவில் குறைக்கப்பட்டுள்ளது என்பதும் கண்டிக்கத்தக்கது.

ஜல்ஜீவன் குடிநீர்த் திட்டத்தில் தமிழ்நாடு கோரியிருந்த ரூ. 3,112 கோடி நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படவில்லை என்று தொடர்ந்து நாம் வலியுறுத்தி வந்த வேளையில், 202526ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் ரூ. 67 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த இந்தத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு, தற்போது திருத்திய மதிப்பீட்டில் வெறும் ரூ. 17 ஆயிரம் கோடி என ஒதுக்கப்பட்டிருப்பது இந்தத் திட்டத்தையே முழுவதுமாக முடக்குவதற்கான முயற்சி என்றே தோன்றுகிறது.

அதேபோன்று, பிரதம மந்திரியின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகக் கடந்த நிதிநிலை அறிக்கையில் 19 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்குவதாக அறிவித்துவிட்டு, தற்போது திருத்திய மதிப்பீட்டில் வெறும் 11 ஆயிரம் கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கி இருக்கிறார்கள். அதேபோல், ஊரகப் பகுதிகளுக்கான பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்திற்கு 35,832 கோடி நிதி ஒதுக்குவதாக அறிவித்து, தற்போது 32,500 கோடி ரூபாய் என்ற அளவில் நிதி குறைக்கப்பட்டிருக்கிறது.

இதைவிட மிகப்பெரிய ஏமாற்றம் என்னவெனில், மிகுந்த ஆரவாரத்துடன் அறிவிக்கப்பட்ட PM Internship Scheme திட்டத்திற்கென 10,831 கோடி ரூபாயைச் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்து, ஆனால் தற்போது 20252026ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில், வெறும் 526 கோடி என்ற சொற்ப அளவிலேயே நிதி ஒதுக்கி இருப்பதன் மூலம், இந்தத் திட்டம் மிகப்பெரிய தோல்வியைத் தழுவி இருக்கிறது என்றுதான் கருத வேண்டி இருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் நலன் குறித்த திட்டங்கள் இடம்பெறும் என்று நாம் ஆவலோடு எதிர்பார்த்து கொண்டிருந்த வேளையில், புதிய திட்டங்கள் ஏதும் இடம்பெறவில்லை. மும்மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்காததன் காரணமாக அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கான 3,548 கோடி ரூபாய், ஜல் ஜீவன் திட்டத்தை நாட்டிலேயே நாம் சிறப்பாகச் செயல்படுத்திய போதிலும் ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்காத நிதி 3,112 கோடி ரூபாய் நிதி குறித்து எந்த அறிவிப்பும் இல்லை. இதுமட்டுமின்றி தமிழ்நாட்டிற்கு எனப் புதிய திட்டங்கள் எதுவும் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை என்பது தமிழ்நாட்டை ஒன்றிய அரசு தொடர்ந்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்திவருகிறது என்பதை வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது.

வழக்கமாக ஒன்றிய நிதியமைச்சர் வழங்கும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் திருக்குறளும் இந்த முறை இடம்பெறவில்லை. தமிழ்நாட்டுக்கான எந்த முக்கியத் திட்டங்களும் இடம்பெறவில்லை. மொத்தத்தில் ஏமாற்றம்! ஏமாற்றம்! ஏமாற்றம்! இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய பட்ஜெட்டால் தமிழ்நாட்டின் சிறு தொழில்கள் அதிகம் பயன்பெறும்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, பிப்.2-

''மத்திய பட்ஜெட்டில் சிறு, குறு தொழில் மேம்பாட்டுக்காக பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நிதி ஆதாரம் பெறுவதை உறுதி செய்ய ரூ.2,000 கோடி, மற்றும் சிறு, குறு தொழில் வளர்ச்சி நிதியாக ரூ. 10,000 கோடி ஒதுக்கீடு போன்றவை மிக உதவியாக இருக்கும். சிறு, குறு தொழில் அதிக அளவில் உள்ள தமிழ்நாடு இதனால் பயன்பெறும்'' என்று அதிமுக பொதுச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தெரி வித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: இந்திய நாட்டின் 2025 2026ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிக்கை கடந்த 29.1.2026 அன்று வெளியிடப்பட்டுள்ள நிலையில், 20262027ஸ்ரீ ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான மத்திய அரசால் (ஞாயிற்றுக் கிழமை) நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து 9ஆவது முறையாக நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து புதிய வரலாற்றுச் சாதனையை படைத்துள்ள மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

உலக அளவில் போர் போன்ற பதற்றத்தால் உள்ள உறுதியற்ற சூழ்நிலையிலும், இந்திய பொருளாதார வளர்ச்சி 20252026க்கு 6.5 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக உயரும் என்றும், 20262027ல் 6.8 முதல் 7.2 சதவீதமாக இருக்கும் என்றும் 2025 2026ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பொருளாதார நிலையில் இந்தியா வலுவான நிலையில் உள்ளதைக் காட்டுகிறது.

இந்த சூழ்நிலையில் 20262027ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, நிதி நிலை மேலாண்மையை வலுப்படுத்தும் வகையில் நிதிப் பற்றாக்குறையையும், பொருளாதார உற்பத்தி மதிப்பில் கடன் அளவைக் குறைக்க எடுத்துள்ள முயற்சிகள் வரவேற்கத்தக்கது. இது வருங்கால பொருளாதார வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தும்.

இறக்குமதியை குறைக்க, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, ஆராய்ச்சி, உற்பத்தி, உயர் தொழில்நுட்பம் சார்ந்த கட்டமைப்புகள் மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு, மின்னணுசார் உற்பத்தி, மருந்துகள், ஜவுளி, கண்டெய்னர் உற்பத்தி போன்ற துறைகளில் உற்பத்தியை ஊக்குவிக்க பூங்காக்கள், உயிரி மருத்துவ பூங்கா, உற்பத்தி மண்டலங்கள் போன்ற பல முயற்சிகளை இந்த நிதிநிலை அறிக்கையில் முன்மொழிந்துள்ளதை பாராட்டுகிறேன். இதற்கான நிதி ஆதாரங்களும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, ஜவுளி மேம்பாடு திட்டம் திருப்பூர், கரூர் போன்ற பகுதிகளுக்கு பயனளிக்கும்.

சரக்கு வேக வழித்தடப் பாதைகள், வேக ரயில் பாதைகள், நீர் வழிப் பாதைகள் மேம்பாடு போன்றவை, போக்குவரத்துத் துறையில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். ஆயுர்வேதம், கால்நடை துறை முதலியவற்றுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளதைப் பாராட்டுகிறேன். சிறு, குறு தொழில் மேம்பாட்டுக்கு பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நிதி ஆதாரம் பெறுவதை உறுதி செய்ய ரூ. 2,000 கோடி, மற்றும் சிறு, குறு தொழில்

வளர்ச்சி நிதியாக ரூ. 10,000 கோடி ஒதுக்கீடு போன்றவை மிக உதவியாக இருக்கும். சிறு, குறு தொழில் அதிக அளவில் உள்ள தமிழ்நாடு இதனால் பயன்பெறும்.

இந்த நிதிநிலை அறிக்கை இந்தியாவின் வளர்ச்சிக்கு வழி வகுப்பதோடு, உலக அளவில் இந்தியா பொருளாதார நிலையில் வலுவான நாடாக உயர்வதற்கு வழிவகுக்கும் என்பதால், பிரதமருக்கும், நிதி அமைச்சருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி தெரி வித்துள்ளார்.

## கலைத்திருவிழா போட்டிகளில் அரசு பள்ளியில் பயிலும் மாணவன் முதன் முறையாக கலையரசன் விருது பெற்று சாதனை




சிவகங்கை, பிப்.2-

பள்ளிக் கல்வித்துறை மூலம் கலைத்திருவிழா போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில் இப்போட்டிகள் பள்ளிஅளவில் ,வட்டார அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவிலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் சிவகங்கை மாவட்டத்திலிருந்து 61 மாணவமாணவிகள் வெற்றி பெற்றனர்.முதல் இடம் 20 மாணவர்களும், இரண்டாம் இடம் 28 மாணவர்களும் மற்றும் மூன்றாம் இடம் 13 மாணவர்களும் பரிசு பெற்றுள்ளனர். மாநிலஅளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா 30.1.2026 அன்று சென்னை. கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெற்றது.

| வ.எண் | பள்ளியின் பெயர் | மாணவனின் பெயர் | முதல் இடம் பெற்ற போட்டியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | தே. ஊ. ஒ. தொ. பள்ளி, தானாவயல் | தரணிதர்.வி | மாறுவேடப் போட்டி |
| 2 | புனித மரியன்னை நடுநிலைப்பள்ளி சாலைக்கிராமம் | ஆ. வேத நடாலினா | களிமண் பொம்மைகள் செய்தல் |
| 3 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | மெகந்திஹா வீ | பரத நாட்டியம் (குழு |
| 4 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | சௌந்தர்யா ம | பரத நாட்டியம் (குழு |
| 5 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | கனிஷ்கா ஸ்ரீ க | பரத நாட்டியம் (குழு |
| 6 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | கலைபாலா பெ | பரத நாட்டியம் (குழு |
| 7 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | அபிராஹரினி ப | பரத நாட்டியம் (குழு |
| 8 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | மது மித்ரா செ | பரத நாட்டியம் (குழு |
| 9 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | சுஹாசினி ர | பரத நாட்டியம் (குழு |
| 10 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | ஜெயஸ்ரீ த | பரத நாட்டியம் (குழு |
| 11 | ஊ ஒ தொ பள்ளி, காளையார் கோவில் கிழக்கு | அஹாசியா ரா | பரத நாட்டியம் (குழு |
| 12 | அரசு உயர்நிலைப் பள்ளி, இலுப்பைக்குடி (காரைக்குடி). | ஜெய்ராகவன் வெ | பாவனை நடிப்பு (Miming) - தனி |
| 13 | இராமநாதன் செட்டியார் நகராட்சி உயர் நிலைப் பள்ளி , காரைக்குடி . | திக் விஜய் ஹரி ச | கிட்டார் (Guitar)/ மாண்டலின் (Mandolin) |
| 14 | அரசு உயர்நிலைப் பள்ளி, இலுப்பைக்குடி (காரைக்குடி). | தமிழமுதன் ரா | பாவனை நடிப்பு (Miming) - தனி |
| 15 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | கோகிலவதனி மூ | இலக்கிய நாடகம் - குழு |
| 16 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | கௌதம் ரா | இலக்கிய நாடகம் - குழு |
| 17 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | கபிலன் மா | இலக்கிய நாடகம் - குழு |
| 18 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | பிரிதிவிராஜ் ச | இலக்கிய நாடகம் - குழு |
| 19 | அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி | வைஷாலினி கு | இலக்கிய நாடகம் - குழு |
| 20 | ஊ.ஒ.தொ.ப சின்னவடகுடிப்பட்டி | ஆசினி அ | வண்ணம் தீட்டுதல்(CWSN) |

இவ்விழாவிற்கு, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தலைமையேற்று, மாநிலஅளவிலான கலைத் திருவிழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு. திரு. பி.கே. சேகர் பாபு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திரு.திண்டுக்கல் ஐ. லியோனி பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். ஆகியோர் இவ்விழாவில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர், மருத்துவர். மா. ஆர்த்தி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இதில் குறிப்பாக, மாநில அளவில் கலைத்திருவிழாப் போட்டிகளில் சிறப்பான பங்களிப்பை அளித்த மாணவ,மாணவிகளுக்கு கலையரசன் மற்றும் கலையரசி பட்டங்கள் வழங்கப்படும். இக்கல்வியாண்டில் வழங்கப்பட்டகலையரசன் விருதினை மாநில அளவில் கிட்டார் வாசித்தல் போட்டியில் முதல் இடமும் மற்றும் புல்லாங்குழல் இசைக் கருவி வாசித்தல் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றமைக்காக காரைக்குடி இராமநாதன் செட்டியார் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பயிலும் திக் விஜய் ஹரி என்பாருக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெறும் கலைத்திருவிழாப் போட்டிகளில் முதன் முறையாக கடந்த ஆண்டில் சிவகங்கை மாவட்டத்தில் "கலையரசி" பட்டத்தினை கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்ற 9ஆம் வகுப்பு மாணவி லேனா பெற்றதே சாதனையாக இருந்தது. அம்மாணவியும் அரசு உதவி பெறும் பள்ளியில் பயிலும் மாணவி ஆவார்.

இதுநாள்வரை சிவகங்கை மாவட்டத்தில் அரசு பள்ளியில் பயிலும் மாணவர் எவரும் கலையரசன் மற்றும் கலையரசி பட்டங்கள் பெற்றதே இல்லை என்ற நிலைதான் இருந்தது. அந்நிலையை மாற்றி இக்கல்வியாண்டில் நமது மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர் திக் விஜய் ஹரி கலையரசன் விருதினை பெற்றது மிகவும் பெருமைக்குரியதாகும். இச்சாதனையினை பெறுவதற்கு உறுதுணையாக இருந்து அம்மாணவனை ஊக்கப்படுத்திய பள்ளித் தலைமையாசிரியை, ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் சிவகங்கை மாவட்ட பள்ளிக்கல்வித் துறையின் சார்பாக பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன. மேலும், இவ்விழாவில் மாநில அளவில் கலைத்திருவிழா போட்டிகளில் முதல் இடம் பெற்ற கீழக்காணும் பள்ளிகளில் பயிலும் 20 மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

மாநில அளவிலான கலைத்திருவிழாப் போட்டிகளில் விருது பெற்ற அனைவருக்கும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் மதிப்புமிகு. திருமதி.கா.பொற்கொடி மற்றும் சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு. பாலதண்டாயுதபாணி ஆகியோர் பாராட்டுக்களையும், வாழத்துக்களையும் தெரிவித்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியம் நடராஜபுரத்தில் ராமசாமி செட்டியார் நினைவு உயர்நிலைப் பள்ளியில் 64 ஆம் ஆண்டு ஆண்டு விழா விளையாட்டு விழா நடைபெற்றது விழாவில் பள்ளி குழு தலைவர் முத்துக்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார் பள்ளிச் செயலர் டாக்டர் சண்முகம் தலைமை வகித்தார் சிறப்பு விருந்தினராக ஐ டி பி யின் டிஐஜி ஜேம்ஸ் ராபர்ட் அவர்களும் பள்ளியின் முன்னாள் மாணவர் டாக்டர் சந்திரசேகரன் அவர்களும் கலந்து கொண்டனர் விழாவில் தேசிய நல்ல ஆசிரியர் கண்ணப்பன் வாழ்த்துரை வழங்கினார் பள்ளி முக வான்மை குழு தலைவர் உடையப்பன் மற்றும் நிர்வாகக் குழுவினர் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர் விழாவில் பள்ளி தலைமை ஆசிரியை லட்சுமி நாராயணி நன்றி உரை கூறினார்.

# "இந்தியாவின் உண்மையான நெருக்கடிகள் மீது கவனம் செலுத்தாத பட்ஜெட்" ராகுல் காந்தி

புது டெல்லி. பிப்.2.-

'இந்தியாவின் உண்மையான நெருக்கடிகள் குறித்து பார்வையற்ற, திருத்தங்களைச் செய்ய மறுக்கும் ஒரு பட்ஜெட் இது' என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். இதுகுறித்து ராகுல் காந்தி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'வேலையில்லாத இளைஞர்கள், சரிந்து வரும் உற்பத்தி, முதலீட்டை திரும்பப் பெறும் முதலீட்டாளர்கள், அதலபாதாளத்தில் விழும் குடும்ப சேமிப்புகள், துயரத்தில் உள்ள விவசாயிகள், வரவிருக்கும் உலகளாவிய அதிர்ச்சிகள் ஆகிய அனைத்தும் இந்த பட்ஜெட்டில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.



இந்தியாவின் உண்மையான நெருக்கடிகள் குறித்து பார்வையற்ற, திருத்தங்களைச் செய்ய மறுக்கும் ஒரு பட்ஜெட் இது" என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் கடினமான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்களை எதிர்கொள்வதற்கான தொலைநோக்குப் பார்வை இந்த பட்ஜெட்டில் இல்லை என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'மோடி அரசாங்கத்திடம் யோசனைகள் தீர்ந்து விட்டது. நமது விவசாயிகள் நலத்திட்டங்களுக்காக காத்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் காணப்பட்டதை விட ஏற்றத்தாழ்வு அதிகரித்துவிட்டது, ஆனால் பட்ஜெட் அதைப் பற்றிக் குறிப்பிடக்கூட இல்லை. எஸ்சி, எஸ்டி, ஓபிசி, இடபிள்யூஎஸ் மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு இந்த பட்ஜெட்டில் எந்த ஆதரவும் வழங்கப்படவில்லை.

நாட்டின் உற்பத்தியில் மறுமலர்ச்சி இல்லை. நமது இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்கான தீவிர திட்டம் இல்லை. ஏற்றுமதி சரிவை சந்தித்துள்ளது. சரிந்து வரும் ரூபாய் மதிப்பை சரிசெய்ய எந்த திட்டமும் இல்லை. ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்துக்கான பணவீக்கத்துக்கு நிவாரணம் இல்லை. நாட்டின் சேமிப்பு வீழ்ந்து, கடன் உயர்ந்துள்ளது குறித்து எந்த திட்டமும் இல்லை.

உள்கட்டமைப்பு வாக்குறுதிகள் மீண்டும் மீண்டும் கொடுக்கப்படுகிறது. நமக்கு எப்போது "ஸ்மார்ட் சிட்டிகள்" அல்லது வாழக்கூடிய நகரங்கள் கிடைக்கும். சமூகப் பாதுகாப்பு குறித்து ஒரு குறிப்பிடத்தக்க அறிவிப்பு கூட இல்லை. பட்ஜெட் இதற்கு எந்த தீர்வுகளையும் வழங்கவில்லை' என்று கார்கே கூறினார்.

# ம.பி.யில் சாலையில் நடனமாடியபடி சிக்னல் கொடுத்த தலைமை காவலர் பதவி இறக்கம்

இந்தூர். பிப்.2.-

சாலையில் மைக்கேல் ஜாக்சன் போல் நடனபாடி சிக்னல் கொடுத்த மத்திய பிரதேச போக்குவரத்து தலைமைக் காவலர், காவலராக பதவியிறக்கம் செய்யப்பட்டார்.

மத்தியப் பிரதேசம் இந்தூரில் பணியாற்றும் போக்குவரத்து தலைமைக் காவலர் ரஞ்சித் சிங். இவர் மைக்கேல் ஜாக்சன் போல் 'மூன்வாக்' நடனமாடி சிக்னல் கொடுத்தார். இந்த வீடியோ டி.வி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலாக பரவியது. இது குறித்த மத்தியப் பிரதேச காவல் துறை விசாரணை நடத்தி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.



தலைமைக் காவலராக பணியாற்றிய ரஞ்சித் சிங்கை, காவலராக பதவியிறக்கம் செய்து கூடுதல் துணை ஆணையர் ராஜேஸ் தந்தோத்யா உத்தரவிட்டுள்ளார். ரஞ்சித் சிங் மீது ஒரு பெண் அளித்த புகாரில் ஏற்கெனவே ஒரு விசாரணை நடந்து வருகிறது. சமூகம் ஊடகம் மூலம் தொடர்பு கொண்ட பெண் ஒருவருக்கு, தன்னை பார்க்க இந்தூர் வரும்படியும், அதற்கு விமான டிக்கெட் ஏற்பாடு செய்வதாகவும் கூறியுள்ளார்.


இது குறித்து அந்த பெண் அளித்த புகாரின் பேரில் ரஞ்சித் சிங் மீது ஏற்கெனவே துறை ரீதியான விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சாலையில் நடனமாடி போக்குவரத்து பணியில் ஈடுபட்டதற்காக அவர் பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# அமெரிக்க சிவில் மோசடி வழக்கு: நோட்டீஸ் பெற அதானி சம்மதம்

நியூயார்க். பிப்.2.-

இந்தியாவில் சூரிய மின்சக்தி ஒப்பந்தங்களை பெறுவதற்கு அரசு அதிகாரிகளுக்கு அதானி குழுமம் சுமார் ரூ.2,100 கோடி லஞ்சம் கொடுத்ததாகவும் ஆனால் அதை மறைத்து அமெரிக்க முதலீட்டாளர்களிடம் நிதி திரட்டியதாகவும் தொழிலதிபர் கவுதம் அதானி, அவரது உறவினர் சாகர் அதானி மற்றும் குழும அதிகாரிகள் மீது அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையம் (எஸ் இசி) குற்றம் சாட்டியது.

இது தொடர்பாக நியூயார்க்கின் ப்ரூக்ளின் பகுதியில் உள்ள பெடரல் நீதிமன்றத்தில் எஸ்இசி கடந்த 2024 நவம்பரில் 2 சிவில் மோசடி வழக்குகளை தொடர்ந்தது. கவுதம்



அதானி, சாகர் அதானி ஆகிய இருவரும் இந்தியாவில் இருப்பதால், அவர்களுக்கு நோட்டீஸ் வழங்க முடியாத நிலையில் இவ்விரண்டு வழக்குகளும் ஒரு வருடத்துக்கும் மேலாக முடங்கியுள்ளன.

இந்நிலையில் புரூக்ளின் பெடரல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவில், எஸ்இசியின் சட்ட ஆவணங்களை (நோட்டீஸை) பெற்றுக்கொள்ள அதானிகள் இருவரும் சம்மதம் தெரிவித்துள்ளதாக அவர்களின் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

வழக்கு அடுத்த கட்டத்துக்கு செல்ல இந்த மனுவுக்கு நீதிபதி ஒப்புதல் அளிப்பது அவசியமாகும். இந்த மனுவை நீதிபதி ஏற்றுக்கொண்டால் அதானிகள் தங்கள் மீதான வழக்கை தள்ளுபடி செய்யக் கோரும் மனுவையோ அல்லது பதிலோ அளிக்க 90 நாள் அவகாசம் பெற முடியும்.

அதன் பிறகு 60 நாட்களுக்கும் எஸ்இசி தனது எதிர்ப்பை தாக்கல் செய்யலாம். இதற்கு அதானிகள் 45 நாளுக்குள் தங்கள் பதில்களை தாக்கல் செய்யலாம். எஸ்இசியின் குற்றச்சாட்டுகளை அதானி குழுமம் மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பல்லாவரத்தில் இளைய கலாம் அறிவியல் திருவிழா 2026 அரசுப் பள்ளி மாணவர்களின் அறிவியல் புதுமைச் சிந்தனை வெளிப்பாடு

பல்லாவரம் பிப் 02.-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் மறைமலை அடிகள் அரசு மேல்நிலைப் பள்ளியில், எச்.சி.எல். அறக்கட்டளை மற்றும் சமூகபொருளாதார மேம்பாட்டு அறக்கட்டளை இணைந்து செயல்படுத்தி வரும் இளைய கலாம் அறிவியல் மையம் சார்பில் இளைய கலாம் அறிவியல் திருவிழா 2026 சிறப்பாக நடைபெற்றது.

2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அறிவியல் மையம், அரசுப் பள்ளி மாணவர்களிடையே அறிவியல் ஆர்வம், புதுமைச் சிந்தனை மற்றும் செய்முறை அடிப்படையிலான கற்றலை வளர்க்கும் நோக்கில் தொடர்ந்து பல்வேறு அறிவியல் பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் மையப் பார்வை, அனுபவ அடிப்படையிலான பயில்சுற்றுப் பயணம் உள்ளிட்ட கற்றல் வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 20,000க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளி மாணவர்கள் இம்முயற்சிகளால் பயனடைந்துள்ளனர்.

இந்த ஆண்டின் அறிவியல் திருவிழாவில் சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த






60க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகள் மற்றும் காவல் துறையுடன் இணைந்த சிறுவர்கள் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு, 100க்கும் மேற்பட்ட அறிவியல் மாதிரிகளை காட்சிப்படுத்தினர். மாணவர்களின் ஆராய்ச்சி திறன், செய்முறை அறிவியல் புரிதல் மற்றும் புதுமைச் சிந்தனையை ஊக்குவிக்கும் வகையில் இந்த திருவிழா அமைந்தது.

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.10,000, இரண்டாம் பரிசு ரூ.7,000, மூன்றாம் பரிசு ரூ.5,000 என பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. மேலும், வெற்றி பெறும் மாணவர்கள் டெல்லியில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழக வளாகத்தில் நடைபெறும் தேசிய அளவிலான அறிவியல் திருவிழாவில் பங்கேற்கும் வாய்ப்பையும், எச்.சி.எல். நிறுவனம் சார்பில் உயர்கல்விக்கான கல்வி உதவித்தொகையையும் பெறுகின்றனர்.

இந்த நிகழ்வில் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கழகத்தின் சென்னை வளாக முதல்வரும் விஞ்ஞானியுமான . ஜி. எஸ். ஐயப்பன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும், பல்லாவரம் சட்டப்பேரவை உறுப்பினர் இ. கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மண்டலம்ரூ 2 தலைவர் . ஐ. ஜோசப் அண்ணாதுரை, சீனியர் முதன்மை விஞ்ஞானி டாக்டர் ஜி. எஸ். ஐயப்பன், எச்.சி.எல். அறக்கட்டளை கல்வி மேலாளர் . ஷஷாங்க் கரே, மூத்த மேலாளர் . நியூட்டன் ராஜ், பள்ளியின் தலைமையாசிரியர் டாக்டர் எஸ். ரவி காசி வெங்கட்ராமன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் . பி. ராஜ்குமார், பள்ளி மேலாண்மை குழு தலைவர் டிஎம்டி எம். விஜி, ஐஐடி மெட்ராஸ் பேராசிரியரும் திட்டமிடல் டீனுமான டாக்டர் சாரதி ராமானுஜம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர்

இந்த அறிவியல் திருவிழாவில் டாக்டர் ஆர். வெங்கடேசன், . வி. அறிவரசன், டிஎம்டி ஹேமலதா எச்., டாக்டர் ஜி. ராமச்சந்திரன் ஆகியோர் நீதிபதிகளாகப் பங்கேற்று மாணவர்களின் அறிவியல் திறமைகளை மதிப்பீடு செய்தனர்.

எச்.சி.எல். அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் சமூகபொருளாதார மேம்பாட்டு அறக்கட்டளை நிறுவனர் . சூர்யகாந்த் குல்கர்னி, . அஜிங்க்யா குல்கர்னி ஆகியோரும் விழாவில் பங்கேற்று மாணவர்களின் அறிவியல் கனவுகளுக்கு ஊக்கம் அளித்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை. அருகே. கட்டிக்குளம். சூட்டுக்கோல். மாயாண்டி. சுவாமி களின். கருப்பனேந்தல். மடம். தவச்சாவையில். புதிதாக. கட்டப்பட்டு. வரும். முருகன் திருக்கோயிலுக்கு. தைபூஷமான. நேற்று 01.02.2026...நிலவாசல்கல்.வைக்கப்பட்டது. கட்டிக்குளம் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் உள்ள பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை சார்பாக, 2025 ஆம் ஆண்டிற்கான புள்ளிஇயல் கையேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் 30.01.2026 அன்று வெளியிட்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் முகமது ஷபீர் ஆலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலகு ஒருங்கிணைப்பாளர் க.குப்புசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.




■ தேனிமாவட்டம் கம்பம் அருள்மிகு வேலப்பர் முருகன் கோவில் மற்றும் லோயர்கேம்ப் அருள்மிகு வழிவிடும் முருகன் கோவிலில் இன்று தைபூசத்தை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள்முருகனை வணங்கி சென்றனர்.மேலும் அணைப்பட்டி சண்முகநாதர் கோவிலில் பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெற்றக் கொண்டிருக்கின்றது.

# 'நடிகர்கள், உதிரிக் கட்சிகளை தூக்கி எறியுங்கள்'அ.தி.மு.க. ஆலோசனை கூட்டத்தில் கே.பி.முனுசாமி பரபரப்பு பேச்சு

கிருஷ்ணகிரி, பிப். 2.-

கிருஷ்ணகிரி அ.தி.மு.க. கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் நேற்று நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அசோக்குமார் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அ.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ., கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்று வரும் தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதன்



காரணமாக ஏற்பட்ட இழப்புகளை கணக்கிட்டு, பில்லுடன் காண்பிக்கும் இயந்திரத்தை அ.தி.மு.க. தலைமை வழங்கியுள்ளதாக கூறினார். அந்த இயந்திரத்தை வீடுவீடாக கொண்டு சென்று, தி.மு.க. ஆட்சியின் அவலங்களை பொதுமக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

மேலும், அ.தி.மு.க.வுக்கு சக்தி இல்லை என்ற மாய தோற்றத்தை உருவாக்க தி.மு.க. தலைவர் ஸ்டாலின் முயற்சித்ததாகவும், ஆனால் தேர்தல் நெருங்கி போட்டி கடுமையான நிலையில், தி.மு.க. – அ.தி.மு.க. இடையேதான் நேரடி போட்டி என அவர் தற்போது ஒப்புக்கொள்வதாகவும் கூறினார்.

ஆகவே, சைடில் வந்த நடிகர்கள், உதிரிக் கட்சிகள் மற்றும் விமர்சன அரசியல் செய்யும் நாலாந்திர அரசியல் தலைவர்களை தூக்கி எறிந்துவிட்டு, அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக உழைத்து, அ.தி.மு.க. வெற்றிக்காக பாடுபட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன், நகர செயலாளர் கேசவன், மாநில மகளிரணி துணை செயலாளர் பரிதா நவாப், ஒன்றிய செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் கே.அசோக்குமார் MLA ExMP உறுப்பினர் அவர்களின் அறிக்கை



கிருஷ்ணகிரி, பிப்.2.-

அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் கே.அசோக்குமார் MLA ExMP கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் அறிக்கை

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 57ஆம் ஆண்டு நினைவு நாள் 03.02.2026 செவ்வாய்கிழமை அன்று அனுசரிக்கப்படுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி அதிமுக சார்பில் அந்தந்த பகுதியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவசிலை மற்றும் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதுசமயம் கழக இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் சார்பமைப்பு நிர்வாகிகள், கிளை கழக பொறுப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், முன்னாள் கூட்டுறவு சங்கபிரதிநிதிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# காங்கோ சுரங்க விபத்தில் 200 பேர் உயிரிழப்பு



கோமா, பிப்.2.-

காங்கோ நாட்டில் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். ஏராளமானோரை காணவில்லை.

ஆப்பிரிக்க கண்டத்தின் மத்திய பகுதியில் உள்ள காங்கோ நாட்டில் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நீடித்து வருகிறது. சுமார் 120க்கும் மேற்பட்ட கிளர்ச்சிக் குழுக்கள் காங்கோவின் பல்வேறு பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளன.

காங்கோவின் வடக்குப் பகுதியில் எம்23 என்ற கிளர்ச்சிக் குழு செயல்படுகிறது. இந்த குழு கோமா, ரூபையா உள்ளிட்ட பல்வேறு பெரிய நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறது. எம்23 கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள ரூபையாவில் மிகப்பெரிய சுரங்கம் செயல்படுகிறது. அங்கு கோல்டான் என்ற கனிமம் வெட்டி எடுக்கப்படுகிறது.

இது செல்போன், கணினி, விமான பாகங்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. ரூபையா சுரங்கத்தில் சுமார் 4,000 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர். சில நாட்களுக்கு முன்பு சுரங்கத்தில் மண் சரிவு ஏற்பட்டது. இதில் இதுவரை 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். ஏராளமானோரை காணவில்லை. அவர்கள் சுரங்கத்துக்குள் சிக்கி உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இதுகுறித்து காங்கோவில் பணியாற்றும் சர்வதேச தொண்டு அமைப்பினர் கூறும்போது, "எம்23 கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள சுரங்கங்களில் போதிய பாதுகாப்பு இல்லை. தொழிலாளர்கள் தங்கள் விருப்பம் போல சுரங்கம் தோண்டுகின்றனர். காங்கோ சுரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பை ஐ.நா.சபை உறுதி செய்ய வேண்டும்" என்றனர்.

# மத்திய பட்ஜெட் தாக்கம்: பங்குச் சந்தைகள் கடும் வீழ்ச்சி!




புதுடெல்லி, பிப்.2.-

மத்திய பட்ஜெட் 2026ல் எதிர்கால ஒப்பந்தங்களுக்கான பத்திரப் பரிவர்த்தனை வரி (STT) உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, பங்குச் சந்தைகள் கடும் சரிவை சந்தித்தன.

மத்திய பட்ஜெட்டில் எதிர்கால ஒப்பந்தங்களுக்கான பத்திரப் பரிவர்த்தனை வரி (Securities Transaction Tax) தற்போதுள்ள 0.02 சதவீதத்திலிருந்து 0.05 சதவீதமாக உயர்த்தப்பட்டது. அனைத்து வகை பங்குதாரர்களுக்கும் பங்குகளைத் திரும்பப் பெறுதல் மூலம் கிடைக்கும் வருமானம் இனி மூலதன ஆதாயமாக வரி விதிக்கப்படும் என்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

இதனால் சென்செக்ஸ் 1,800 புள்ளிகளுக்கு மேல் சரிந்தாலும், பட்ஜெட் முழுமையாக தாக்கல் செய்யப்பட்ட பின்னர் மீண்டு 1,000 புள்ளிகள் சரிந்த நிலையில் வர்த்தகமானது. அதே சமயம், பிற்பகல் 1:09 மணி நிலவரப்படி, என்எஸ்இ நிஃப்டி50யானது 211.35 புள்ளிகள் சரிந்து 25,109.30 ஆக இருந்தது. இன்று நிஃப்டி 50 குறியீடு 25,333.75 இல் வர்த்தகத்தை தொடங்கியது. அதே நேரத்தில் பிஎஸ்இ சென்செக்ஸ் 82,445.97இல் தொடங்கியது.

பிஎஸ்இ சென்செக்ஸ் பட்ஜெட் தாக்கலின் போது 2,370.36 புள்ளிகள் அல்லது 2.88 சதவீதம் சரிந்து, 80,000 புள்ளிகளுக்கு கீழே சென்றது. அதேபோல 50 பங்குகளைக் கொண்ட என்எஸ்இ நிஃப்டியும் இதே சரிவைப் பிரதிபலித்து, 748.9 புள்ளிகள் அல்லது 2.95 சதவீதம் சரிந்து 24,571.75 ஆக இருந்தது.

பாரத் எலெக்ட்ரானிக்ஸ் பங்குகள் 6.50 சதவீதம் சரிந்தது, அதே நேரத்தில் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, எச்சிஎல் டெக், டாடா ஸ்டீல், ஏசியன் பெயிண்ட்ஸ் மற்றும் எடர்னல் ஆகிய பங்குகளும் சரிவை சந்தித்தன. சன் பார்மா, கோடக் மஹிந்திரா வங்கி மற்றும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் ஆகியவை லாபம் ஈட்டிய பங்குகள் ஆகும்.

# ஆந்திர முதல்வர் சந்திரபாபு தொகுதியில் இ-சைக்கிள் விநியோகத்தில் கின்னஸ் சாதனை

குப்பம், பிப்.2.-

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தனது சொந்த தொகுதியான குப்பம் தொகுதியில் 3 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். இதில் 2ம் நாளான நேற்று பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மூத்த குடிமகன்கள் (வீட்டில் எத்தனை பேர் இருந்தாலும்), கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகளுக்கு தலா ரூ.4 ஆயிரம், மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.6 ஆயிரம், கடும் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தலா ரூ.15,000 என ஒவ்வொரு மாதமும் சரியாக 1ம் தேதி வழங்கப்படுகிறது.

இதில் சந்திரபாபு நாயுடு தனது குப்பம் தொகுதியில் உள்ள பயனாளிகளுக்கு நேரில் இந்த உதவி தொகையை அவரவர் வீடுகளுக்கே சென்று வழங்கினார்.

அதன் பின்னர், குப்பம் தொகுதி சாந்திபுரத்தில் மகளிர் சுய உதவி குழுவினருக்கு மொத்தம் 5,555 இசைக்கிள்களை வழங்கினார். அப்போது சந்திரபாபு, மகளிர் உட்பட அனைவரும் சுமார் 3 கி.மீ தூரம் பொதுக்கூட்ட மேடை வரை சைக்கிளில் வந்தனர். 5555 இசைக்கிள்கள் விநியோகம், 3 கி.மீ. தூரம் வரை அனைவரும் அதனை ஓட்டியபடி வந்தது என்பது கின்னஸ் சாதனை என கூறி, அங்கிருந்த கின்னஸ் புத்தக பிரதிநிதிகள் அதற்கான சான்றிதழை வழங்கினார்.

# சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி பா. செந்தில்குமார் பிறந்தநாள் விழா



சிவகங்கை பிப் 02.-

சிவகங்கை திமுக இளைஞரணி மாவட்ட அமைப்பாளராகக் கழகப் பணியாற்றி வருபவர் நாகனி பா. செந்தில் குமார்...

தேவகோட்டைப் பகுதியில் இருந்து மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராக உள்ளாட்சிப் பிரதிநிதியாக மக்கள் பணியாற்றியவர் நாகனி பா. செந்தில்குமார் ஆவார்...

இவர் தனது இல்லத்தில் தேவகோட்டை ராம் நகரில் நேற்று மாலை தனது பிறந்தநாளை முன்னிட்டு கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் முன்னிலையில் கேக் வெட்டி பிறந்தநாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்...

முதலில் தனது பெற்றோர்களிடமும் பிறகு மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சரும் மாவட்டக்கழக செயலாளருமான கேஆர். பெரியகருப்பன் , மேனாள் அமைச்சர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முகவை மு. தென்னவன் ஆகியோரிடத்திலும் வாழ்த்துகளைப் பெற்றார்...

நேற்று மாலை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான மணலூர் கே. எம். பொற்கோ, வழக்கறிஞர் சேதுபதி ராஜா, கோவிலூர் பரணிகிட்டு, எஸ். எம். மதிவாணன் , கிங் கார்த்திக், முகமது மஹாதீர், வீரஈஸ்வரன் ஆகியோரும் , மாநகர் இளைஞரணி தினகரன், துணை அமைப்பாளர்களான காரை கார்த்திக், கௌதம் கிருஷ்ணமூர்த்தி , தேவகோட்டை வடக்கு இளைஞரணி அமைப்பாளர் ஆறாவயல் இராமநாதன் , துணை அமைப்பாளர், மாவட்டப் பிரதிநிதி கணேசன் , துணை அமைப்பாளர் அஜீத் , சிவகங்கை நகர் இளைஞரணி மகேஷ் சேதுபதி, நாட்டரசன்கோட்டை பேரூர்க்கழக இளைஞரணி அமைப்பாளர் மோகன்ராஜ் உள்ளிட்ட மாவட்ட, , ஒன்றிய , மாநகர, நகர, பேரூர்க்கழக, கிளைக்கழக இளைஞரணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், நிர்வாகிகள் என ஏராளமானோர் நேரில் சென்று பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# ஊழல் புகார்: சீன ராணுவத்தின் 2 தளபதிகள் பதவி நீக்கம்



பெய்ஜிங், பிப்.2.-

சீன அதிபர் ஜி ஜின்பிங் அந்த நாட்டின் மத்திய ராணுவ கமிஷனின் (சிஎம்சி) தலைவராக செயல்படுகிறார். இந்த கமிஷனின் கட்டுப்பாட்டின் கீழ் சீன ராணுவம், கடற்படை, விமானப்படை, ஏவுகணைப் படை ஆகியவை செயல்படுகின்றன.

சிஎம்சி அமைப்பின் துணைத் தலைவராக ஜாங் யூக்ஸியா பதவி வகித்து வந்தார். ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் சில நாட்களுக்கு முன்பு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். சிஎம்சி அமைப்பின் பணியாளர் பிரிவு தலைவராக பணியாற்றிய லீயு ஜென்ஸியும் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.




# இந்தியாவில் Cloud சேவைகளை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 2047 வரை வரிவிலக்கு

டெல்லி, பிப்.2.-

இந்தியாவில் Cloud சேவைகளை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 2047 வரை வரிவிலக்கு என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். பங்குகளை திருப்பி வாங்கும் நிறுவனங்களுக்கு மூலதன ஆதாய வரி விதிக்கப்படும்.

# முதலமைச்சர் சிவகங்கை வருகை...மாவட்ட திமுக வினர் உற்சாக வரவேற்பு



காரைக்குடி பிப் 02.-

சிவகங்கை மாவட்டம் சிறாவயல் , குன்றக்குடி , கானாடுகாத்தான் , காரைக்குடி உள்ளிட்ட பகுதிகளில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து பின்னர் வேளான்மைக் கல்லூரி, அரசு சட்டக்கல்லூரி திறந்து வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்டநிகழ்ச்சிகளுக்குக சிவகங்கை மாவட்டத்தில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கடந்த இரண்டு நாட்களாக சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

மதுரையிலிருந்து சாலைமார்க்கமாக திருப்புத்தூர் அண்ணா சிலை வந்தடைந்த முதலமைச்சருக்கு மாவட்ட திமுக சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாவட்ட திமுக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் தலைமையில் மேனாள் அமைச்சர் தென்னவன், மேனாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் ஆ. தமிழரசி ரவிக்குமார், சேர்மன் சேஙாகைமாறன் ஜோன்ஸ் ரூஸோ , மாநில செய்தித் தொடர்பு இணைச்செயலாளர் மருது அழகுராஜ் , மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன் , கழக மாணவரணி துணைச் செயலாளர் புதுக்குறிச்சி ஜெ. இராமகிருஷ்ணன் தொகுதி பார்வையாளர்களான மேனாமேனாள் அமைச்சர் சுந்தரராஜன் , சேர்மன் கேஆர்என். போஸ் , புதுக்கோட்டை சண்முகம் , ஆர். எஸ். மங்களம் சேர்மன் நல்ல சேதுபதி ஆகியோரும் திமுகவினர் ஆயிரக்கணக்கானோர் திரளாக கலந்து கொண்டு வரவேற்பு அளித்தனர்...

இதேபோல் திருப்புவனம் மேற்கு, தெற்கு, ஒன்றியக் கழகத்தில் இருந்து மாவட்ட துணைச்செயலாளர் சேர்மன் த. சேங்கை மாறன் தலைமையிலும் , மானாமதுரை நகரச் செயலாளர் க. பொன்னுச்சாமி , சட்டமன்ற மேனாள் உறுப்பினர், மானாமதுரை சேர்மன் எஸ். மாரியப்பன் கென்னடி ஆகியோரது தலைமையில் முன்னூறுக்கும் மேற்பட்ட திமுகவினர் , திருப்புவனம் மேற்கு வசந்தி சேங்கைமாறன் தலைமையில் ஏராளமானோரும் , திருப்புவனம் பேரூர்க் கழகத்திலிருந்து பேரூர்க்கழக செயலாளர் நாகூர் கனி தலைமையில் பேரூர் துணைச் செயலாளர் மீனாட்சிசுந்தரம் , பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் ரஹமதுல்லாகான் , பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்களான பள்ளத்தூர் கே. எஸ். ரவி தலைமையில் நூற்றுக் கணக்கானோர், சிவகங்கை நகரச் செயலாளர் சேர்மன் சி. எம். துரை ஆனந்த் தலைமையில் ஏராளமானோரும், சட்டமன்ற மேனாள் உறுப்பினர், ஒன்றியக்கழக செயலாளர் சுப. மதியரசன் தலைமையில் நூற்றூக்கணக்கானோரும் , தேவகோட்டை நகர்க்கழக திமுக சார்பில் நகரச் செயலாளர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர், நகர்மன்ற உறுப்பினர் பெரி. பாலமுருகன் அம்பலகாரர் தலைமையில் துணைச் செயலாளர் எழில் மாறன், பொருளாளர் அன்புச்செல்வன், கருணாநிதி, ஜாஹீர் உஸேன் , மும்முடிநாதன், பி. ஆர். எஸ். பாண்டியன், மகளிரணி ராஜாத்தி, அரவிந்த், அரவிந்த் மகாதேவன், காளிதாஸ், பாண்டி மீனாள், மும்தாஜ், அருணா ஆகியோரும் தேவகோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனி ரவி தலைமையில் ஐடி விங் முப்பையூர் சிவா உள்ளிட்ட ஏராளமான திமுகவினரும் , கண்ணங்குடி லே. மு. ரவிச்சந்திரன் தலைமையில் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட திமுகவினரும் ,

.தேவகோட்டை வடக்கு வழக்கறிஞர் பூபாளசிங்கம் தலைமையிலும் , மீனவரணி வெள்ளிக்கட்டி அன்பழகன், ஆறாவயல் இராமநாதன் , துணைச்செயலாளர் பெரியசாமி , சுப்பிரமணியன் , முரசொலி, உள்ளிட்ட சுமார் எழுநூறுக்கும் மேற்பட்டோரும் , இளையான்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு. செல்வராசன் தலைமையில் ஐநூறாக்கும் மேற்பட்டோரும் , சிவகங்கை தெற்கு ம. ஜெயராமன் தலைமலயில் நூற்றூக்கணக்கானோரும், சிவகங்கை வடக்கு திருமலை முத்துராமலிங்கம் தலைமையில் ஏராளமானோரும் , சிவகங்கை மேற்கு கண்டாங்கி பட்டி பெ. மந்தக்காளை தலைமையில் ஏராளமானோரும், இளையான்குடி கிழக்கு வே. தமிழ்மாறன் , காளையார்கோவில் கிழக்கு வே. ஆரோக்கியசாமி , ஆர். எம். கென்னடி, கிருஷ்ணகுமார் ஆகியோரது தலைமையில் ஆயிரத்திற்கும் மற்பட்டோரும் , அண்ணாதுரை , லதா அண்ணாதுரை தலைமையில் ஏராளமானோரும் , இளையான்குடி மேற்கு கா. வெங்கட்ராமன் தலைமையில் ஏராளமானோரும் , திருப்புவனம் கிழக்கு ஏனாதி கடம்பசாமி தலைமையில் ஏராளமானோரும் கலந்து கொண்டு முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்...

இந்நிலையில் சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், மாவட்ட மேனாள் கவுன்சிலர் நாகனி பா. செந்தில்குமார், தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர்களான மணலூர் பொற்கோ, மதிவாணன், கிங் கார்த்திக், முகமது மஹாதீர், வீர ஈஸ்வரன் , பிரமனூர் அறிவுக்கரசு , காளையார்கோவில் சக்திதாசன் , குயவன்குளம் அழகுசெல்வா , இளையான்குடி சிவா , வண்டவாசி தங்கம், மானாமதுரை வேங்கை சுந்தர் , மாரிக்கண்ணன் , கீரனூர் கணேசன் , திருப்புவனம் காளிதாஸ் , இராணியூர் கர்ண. அருண்குமார் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோரும் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதிர். இராஜ்குமார் தலைமையில் சட்டக்கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் காரைக்குடி ஜெபத்துரை , கொல்லங்குடி சதீஷ்குமார், திருப்புவனம் பாண்டியார் கிருஷ்ணன் , லோகேஷ் அம்பலம் , மானாமதுரை கார்த்திக் என சுமார் இறுநூறுக்கும் மேற்பட்டோரும் , கலந்து கொண்டு சிறப்பானதொரு வரவேற்பை கொடுத்தனர்...

இதில் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்களான பாகனேரி பி. டி. ஆர். முத்து , பள்ளத்தூர் கே. எஸ். ரவி, மாவட்ட அறங்காவலர் ஏ. ஆர். ஜெயமூர்த்தி , உள்ளிட்ட மாவட்ட திமுகவினரான கொத்தமங்கலம் அ. சேது, சொக்கனாதிருப்புடி. ஆர். சேகர், அச்சங்குளம் முருகன் , முனைவர் இளங்கோ, அகரம் ரவிச்சந்திரன், காத்தமுத்து , சங்கங்குளம் ஈஷ்வரன் , சிவாஜி , அண்ணாமலை, மடப்புரம் மகேந்திரன், சொட்டதட்டி சக்திமுருகன் , துணைச் செயலாளர்களான விஏஓ. முத்து, கோலாந்தி கோதண்டபாணி , எஸ்தர் மேரி, ஆர். வி. எஸ். அரங்கநாதன் , வழக்கறிஞர்களான பாஸ்கரன், ஆதி. அழகர்சாமி, துஷாந்த் பிரதீப் குமார், பில்லூர் கார்த்தி, அல்லூர் உமாசங்கர் , திருமலை ஏ. டி சேகர், சித்தலூர் பா. ஆனந்தகுமார், கழக மூத்த முன்னோடி, நீர்ப்பாசன சங்கத் தலைவர் அல்லூர் ரவிச்சந்திரன் , மதியழகன் , மடப்புரம் அப்பாச்சாமி, துரும்புபட்டி சுப. தமிழரசன், கீழக்கோட்டை கண்ணன், மேப்பல் அழகப்பன் , நீர்ப்பாசனம் அன்னவாசல் சண்முகம், கொன்னக்குளம் மலைச்சாமி , இளையான்குடி சுப. தமிழரசன் , விவசாய அணி காளிமுத்து , சொக்கனாதபுரம் கணணன் , அல்லூர் சங்கரலிங்கம், ரைஸ்மில் கணேசன் , ஆகியோரும் ஐடி விங் வழக்கறிஞர் வினோத், முப்பையூர் சிவா, கி. கண்ணன், சதீஷ்குமார், ஜி. ஆர். பாலா , புவனேஷ்வரன் , கவுன்சிலர் சோம. சதீஷ்குமார். மானாமதுரை ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம் சார்பில் ஜீவாக்கண்ணன் , எம். எம். பாண்டி, தர்மா , தேவாரம்பூர் இராமநாதன் , வஞ்சி கணேசன், ஹலோ குமார், பொறியாளர் பாஸ்கர் , நெற்குப்பை ஐடி விங் முருகேசன் , செல்வகுமார், ஆட்டோ பாண்டி, பூமி, பிரபு, குமார், செல்லப்பாண்டி, ரகு என ஏராளமானோர் கலந்து கொண்டு மாண்புமிகு முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்...



## எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிறப்பு மருத்துவ முகாம் மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ராஜேந்திரன் துவங்கி வைத்தார்

தாம்பரம் பிப்ரவரி 02.-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், பரங்கிமலை மேற்கு ஒன்றியம் சார்பில் எம் ஜி ஆர் அவர்களின் 109வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அகரம் தென் ஊராட்சி கஸ்பாபுரம் தனியார் பள்ளியில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில், அப்பகுதி பொதுமக்கள் பங்கேற்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாம், 31.01.2026 அன்று காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெற்றது.

முகாமில், பொது மருத்துவம் உள்ளிட்ட அடிப்படை சிகிச்சைகள் வழங்கப்பட்டதுடன், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமான பொதுமக்கள் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு பயன் பெற்றனர்.

முன்னதாக இந்த மருத்துவமுகாமினை அ தி மு க செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச ராஜேந்திரன் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பரங்கிமலை மேற்கு ஒன்றியச் செயலாளர் மனோகரன், செங்கல்பட்டு மாவட்டம் மருத்துவர் அணி மாவட்ட செயலாளர் பாலாஜி, பரங்கிமலை மேற்கு ஒன்றிய துணை செயலாளர் அகரம்தென் ஆதிகேசவன்.பரங்கிமலை மேற்கு ஒன்றிய மாணவரணி துணை தலைவர்வழக்கறிஞர் குமார், அகரம்தென் ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் பொருப்பாளர்கள் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்று மருத்துவ முகாமை பயன்படுத்திக்கொண்டனர். பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு நடத்தப்பட்ட இந்த இலவச மருத்துவ முகாம்,பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

## முதல்-அமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா கலெக்டர் தினேஷ் குமார், எம்.எல்.ஏ மதியழகன் தொடங்கி வைத்தனர்

கிருஷ்ணகிரி, பிப்.2.-

கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில், முதல்-அமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா இது நம்ம ஆட்டம் 2026 மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை கலெக்டர் ச.தினேஷ்குமார், மதியழகன் எம்.எல்.ஏ., ஆகியோர் தொடங்கி வைத்தனர். அப்போது கலெக்டர் கூறியதாவது: முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், இளைய தலைமுறையினரின் முன்னேற்றம், உடற்கல்வி, விளையாட்டு, சமூக இணைப்பு மற்றும் உடல் மன ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் நோக்கில் ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் முதல்-அமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா 'இது நம்ம ஆட்டம் 2026" போட்டிகள் நடத்த அறிவுறுத்தி உள்ளார். அதன்படி, கிருஷ்ணகிரி



10 ஒன்றியங்களில் கடந்த 25, 27ம் தேதிகளில் போட்டிகள் நடத்தப்பட்டது. கிருஷ்ணகிரிக்கு எயினர் நாடு என்கிற பெயரும் உள்ளது. எயினர் நாடு என்றால் வில் அம்பு, வீர வித்தைகளில் சிறந்து விளங்குவது ஆகும். தமிழகத்திலேயே அதிகளவில் நடுகற்கள், பாறை ஓவியங்கள் உள்ள மாவட்டமாகும். அந்த பாறை ஓவியத்திலும் வீரத்தை பறைசாற்றும் ஓவியமாக உள்ளது. இயற்கையிலேயே வீரம் மிகுந்த கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து மிக அதிகமாக ராணுவத்திற்கு ஆட்கள் சேர்ந்து வருகின்றனர். விளையாட்டை மேம்படுத்துவதற்கு இயற்கையான சூழ்நிலை அமைந்துள்ள மாவட்டமாக கிருஷ்ணகிரி விளங்குகிறது. இதனை மெய்ப்பிக்கும் வகையில், முதல்-அமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழாவில் போட்டிகளில் பதிவு செய்ததில், தமிழகத்திலே 4வது மாவட்டமாக கிருஷ்ணகிரி உள்ளது. விளையாட்டு என்பது சமூக வன்முறை போன்றவற்றிலிருந்து மீட்டெடுத்து நல்வழிப்படுத்த விளையாட்டு சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களுக்கு அரசு வேலையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. உடற்கல்வி ஆசிரியராகவும், விளையாட்டு பயிற்சியாளராக பணிபுரியலாம். மல்லர் கம்பம் விளையாட்டு பயிற்சிக்கு மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் இட ஒதுக்கீடு செய்து தரப்படும். மேலும் வேலம்பட்டியில் உள்ள பூங்காவில் சமூக பொறுப்பு நிதியின் கீழ், மல்லர் கம்பம் பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், என்றார். தொடர்ந்து கலெக்டர், எம்.எல்.ஏ ஆகியோர் விளையாட்டு போட்டியில் பங்கு பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு சீருடைகளை வழங்கினர். இந்நிகழ்வில், மாவட்ட விளையாட்டு நலன் அலுவலர் நடராஜ முருகன், நாகரசம்பட்டி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, வட்டார வளர்ச்சி அலுவலர் உமாசங்கர், தி.மு.க மாவட்ட அவைத் தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ்,மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, கவுன்சிலர் சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## பல்லாவரத்தில் 14வது மற்றும் 15வது வார்டுகளில் அங்கன்வாடி மையம் திறப்பு விழா நடைபெற்றது

பல்லாவரம் பிப்ரவரி 02.-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 14வது மற்றும் 15வது வார்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று ஏழை எளிய குழந்தைகளின் அங்கன்வாடி மையம் பழுதடைந்த மூன்று அங்கன்வாடி மைய கட்டிடங்களை ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பித்து 2வது மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்துகொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர் இதில் மாமன்ற உறுப்பினர்கள் டி.வி.ராஜா, மங்கையர் திலகம் ராஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் பகுதி கழகத் துணைச் செயலாளர் வ,முத்து, வட்டக் கழகச் செயலாளர் பி.ராஜ்குமார், பல்லாவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் முரசொலி ராஜன், பல்லாவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் கௌதம், பகுதி கழங நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்.



## அகசிப்பள்ளி ஊராட்சியில் பகுதி நேர ரேஷன் கடை பல்நோக்கு கட்டிடம் பூமி பூஜை,அசோக் குமார் எம்எல்ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, பிப் 02.-

கிருஷ்ணகிரி ஒன்றியம் அகசிப்பள்ளி ஊராட்சி ராயக்கோட்டையான் கொட்டாய் கிராமத்தில், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025ரூ26 ஆம் ஆண்டு நிதியின் கீழ் ₹7 லட்சம் மதிப்பீட்டில் பகுதி நேர ரேஷன் கடை அமைக்கப்படும் பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை விழா நடைபெற்றது.


இந்த பணியை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அசோக் குமார் அவர்கள் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் கிழக்கு ஒன்றிய செயலாளர் கன்னியப்பன், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி ஆஜி, அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளர் தாபா வெங்கட்ராமன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டு திட்டத்தின் அவசியம் குறித்து பேசினர்.

மேலும் அம்மா பேரவை துணைச் செயலாளர் ரமேஷ், இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் ரமேஷ், சின்னசாமி, கோபி, மாது, திம்மராயன், குமார், கோவிந்தன், சின்ன கவுண்டர், காவேரி, கதிரேசன், முருகன், மந்திரி கோவிந்தசாமி, விக்ரம், மந்திரி திருப்பதி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த பகுதி நேர ரேஷன் கடை பல்நோக்கு கட்டிடம் அமைக்கப்படுவதன் மூலம், ராயக்கோட்டையான் கொட்டாய் மற்றும் சுற்றுவட்டார கிராம மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் எளிதில் கிடைக்கும் வகையில் வசதி ஏற்படும் என பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு பூமி பூஜை விழாவை சிறப்பித்தனர்.



## காவேரிப்பட்டணத்தில்தைபூசதிருவிழாராஜ அலங்காரத்தில் முருகர் காட்சியளித்தார்

கிருஷ்ணகிரி, பிப்.2.-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் பாலகோடு ரோட்டில் அமைந்துள்ளஅருள்மிகு ஸ்ரீசிவசுப்பிரமணிய ஆலயத்தில் தை பூச திருவிழா வெகு விமர்சியாக கொண்டாப் பட்டது.

திருவிழாவையொட்டி அதிகாலை 5 மணி முதலே கோவிலுக்கு வர தொடங்கினர்.

முருகபெருமான் ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார். மேலும் பக்தர்கள் பால் குடம் எடுத்தும், காவடி எடுத்தும், அழகு குத்தியும் முருகனை வழிபட்டனர்.

கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு கோவில் நிர்வாகத்தின் சார்பில் நீர்மோர், அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் காவல் துறை சார்பில் பலத்த போலீஸ் காவல் துறை சார்பில் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.



## தைப்பூச திருவிழா: மாவட்டத்தில் முருகன் கோவில்களில் சிறப்பு பூஜைகள்காவடி, அலகு குத்தி பக்தர்கள் நேர்த்திக்கடன்

கிருஷ்ணகிரி, பிப்.02.-

தைப்பூச திருவிழாவை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் உள்ள முருகன் கோவில்களில் நேற்று சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதில் ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்தும், அலகு குத்தியும் நேர்த்திக்கடன் செலுத்தினர்.

முருகன் கோவில்களில் நடைபெறும் முக்கிய திருவிழாக்களில் தைப்பூசம் சிறப்பு பெற்றதாகும். இதையொட்டி, கிருஷ்ணகிரியில் பிரசித்தி பெற்ற காட்டிநாயனப்பள்ளி வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணிய சாமி கோவிலில் தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதிகாலை முதல் சாமிக்கு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன.

காலை முதலே பக்தர்கள் பால் குடம் எடுத்தும், காவடி சுமந்தும், அலகு குத்தியும் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தனர். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்ததால் நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்தனர்.

விழாவையொட்டி அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன. மேலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 அஇஅதிமுக வாக்குறுதிகள் குறித்த துண்டு பிரசுரங்கள் விநியோகம்

காவேரிப்பட்டணம், பிப்.02:-

வரவுள்ள 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, அஇஅதிமுக சார்பில் தேர்தல் வாக்குறுதிகளை பொதுமக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில், காவேரிப்பட்டணம் நகரில் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கும் நிகழ்ச்சி இன்று மாலை நடைபெற்றது.

காவேரிப்பட்டணம் அதிமுக நகர செயலாளர் விமல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பொதுமக்கள் அதிகளவில் கூடும் காவேரிப்பட்டணம் வாரச்சந்தை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

அதில்,மாதந்தோறும் அனைத்து குடும்ப தலைவிகளுக்கும்



ரூ.2000 உதவி தொகை,ஆண்கள் மற்றும் மகளிர் அனைவருக்கும் கட்டணமில்லா பேருந்து சேவை,அனைவருக்கும் வீடு ரூ 'அம்மா இல்லம்' திட்டம்,100 நாள் வேலைத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும்,

ரூ.25,000 மானியத்தில் 5 லட்சம் மகளிருக்கு இருசக்கர வாகனம், உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த முக்கிய வாக்குறுதிகள் இடம்பெற்றிருந்தன.

இந்த வாக்குறுதிகள் குறித்து பொதுமக்களிடம் விளக்கி கூறிய அதிமுக நிர்வாகிகள், அஇஅதிமுக ஆட்சி காலத்தில் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத் திட்டங்களையும் நினைவூட்டினர்.இந்த நிகழ்ச்சியில், நகர அவைத் தலைவர் வேணுகோபால்,முன்னாள் நகர செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் வாசுதேவன்,நகர துணை செயலாளர் அருள் மூர்த்தி,மாவட்ட பிரதி நிதி பழனி,முன்னாள் கவுன்சிலர் வெங்கடேஷ்,

அதிமுக மாவட்ட பிரதி நிதி ராஜவேல்,அதிமுக பேரூராட்சி கவுன்சிலர்கள் ஜாபர் பாஷா, அபிராமி மதனகோபால், சுஜாதா, திருமால், சிவா, அருண், கார்த்திக், ஜோதி, ராஜா, ஜெயராஜ்,சான் பாஷா, ஆட்டோ அப்துல் ரபீக்,தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் பாலாஜி, மோகன்,

நகர இளைஞரணி செயலாளர் தாமோதரன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினர். இந்த நிகழ்ச்சியால் வாரச்சந்தை பகுதியில் தேர்தல் சூழல் மேலும் பரபரப்பாக காணப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161